# சென்னை மெட்ரோ நிறுவனத்துக்கு 'ஃபிஸ்ட்' விருது

சென்னை

இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப் பணிகளை பாராட்டி 'ஃபிஸ்ட்' விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கம் மற்றும் அவசரகால உதவித் துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் 'ஃபிஸ்ட்' விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப் பணிகளை பாராட்டி அந்த சங்கம் சார்பில் 'ஃபிஸ்ட்' விருது டெல்லியில் நடந்த விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சர்வதேச தலைவர் பங்கஜ் தர்கர் இந்த விருதை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் (திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதியிடம் வழங்கினார்.